**கவனிக்க.**- 2006.6.09 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1450 - 2006 ජූනි 16 වැනි සිකුරාදා - 2006.06.16

1450 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 52 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 52 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- குடிமக்களின் வீரச்செயல்களுக்கான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2006, மே 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூன் 23 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூன் 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 25, ஹில் வீதி, தெஹிவளை என்ற முகவரியில் வசிக்கும் அகம்பொடி ரஜினி சுதர்மா டி சில்வா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு குணசிரி விஜேமான்ன என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியிடப்பட்ட 297 இலக்கமிடப்பட்ட அற்றோனித் தத்துவப்பத்திரம் மூலம் இல. 25, ஹில் வீதி, தெஹிவளை என்ற முகவரியில் வசிக்கும் சுதர்மா காந்தி டி சில்வா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோனித் தத்துவப்பத்திரத்தை இரத்து செய்வதுடன் இது செல்லுபடி ஆகாது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

மேற்குறித்த சுதர்மா காந்தி டி சில்வா என்பவரால் மேற்கொள்ளப் படும் எதுவித நடவடிக்கைக்கும் இனிமேல் பொறுப்பாளியாக மாட்டேன் என்றும் இத்தால் அறிவிக்கின்றேன்.

அகம்பொடி ரஜினி சுதர்மா டி சில்வா.

2006, மே 18.

6-354

## அட்டோர்ணி தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

கொழும்பு 4, மெல்போர்ன் அவன்யூ, இல. 5 இல் வசிக்கும் கிரிசாந்த் தனேசா சல்காடோ ஆகிய நான், கொழும்பு 4, மெல்போர்ன் அவன்யூ, இல. 5 இல் வசிக்கும் சிந்தாமணி மங்களா சல்காடோ என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட சாந்தி தாமஸ் கொழும்பு பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 10 ஆந் திகதி மாசி மாதம் 2005 ஆம் ஆண்டு என திகதியிடப்பட்டதுமான 1260 ஆம் இலக்க அட்டோணி தத்துவப்பத்திரத்தினை இரத்துச்செய்துள்ளதாக, இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் அறிவித்தல் வழங்குகிறேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட சிந்தாமணி மங்களா சல்காடோ என்பவரி னால் என் சார்பாக செய்யப்படும் எக்காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்க மாட்டேன்.

கிரிசாந்த தனேசா சல்காடோ.

2006, ஆனி 02.

6-381

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி – இப்பாகமுவ கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான விற்பனை*

**கனேவத்தை, ஹிரிபிடிய பாதையருகே- வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், ஹிரியால ஹத்பத்துவ, மஹகல்பொட, எகொட கோறளை, நெலுவ என்ற கிராமத்தில் கனேவத்தை, ஹிரிபிடிய பாதையருகே அமைந்துள்ள "கொலொன்கஹ முலஹேன, கொலொன்கஹமுலகால, மாவீஹேன, கொலொன்கஹமுல ஹேனவத்தை" என்ற காணிக்கு 1989.05.06 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 569 ஆம் இலக்க வரைபடத்தின் 4 ஆம் இலக்க காணி அதன் பரப்பளவு ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணமுள்ள காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் 2006.07.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

2002.11.29 ஆந் திகதிய இலங்கை அரசின் வர்த்மானியையும் 2002.11.14 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் பாதை.-** கணேவத்தை நகரத்திலிருந்து கும்புக்கெட்டே செல்லும் பாதையில் 1/4 மைல் அளவு சென்றவுடன் பாதையருகே இருக்கும் ஆலமரத்துக்கு முன்பாக 13 ஆம் மைல் கல்லுக்கு 100 மீட்டருக்கு முன்னதாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையின் முடிவின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-

(1) தாம் வாங்கிய விலையின் 10% த்தையும் ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையினது, பிரதேச சபையினதும் 1% வரியையும் ;

(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனைத் தொகை யின் 2 1/2% கமிசனையும் ;

(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூபா 500 ஐயும் ;

(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணத்தையும், விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90% பங்குப் பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத் தப்படல் வேண்டும். தொலைபேசி இல. 037-2222453, பெக்ஸ் இல. 037-2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களைக் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும்

திருப்பிச் செலுத்தாமலிருக்கவும் மீண்டும் சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமையுண்டு.

டபிள்யூ. எம். ஜ. கல்லேல்ல (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்,
மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள் கட்டிடத் தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. 037-2220062.

6-425

---

### பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளின் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழான விற்பனை*

**ஒரு பெறுமதியான சொத்துக்கான ஏல விற்பனை**

**மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பஸ்பாக கோரளை பகுதி செயலாளர் பிரிவு அம்பகமுவையில் அமைந்த காணி அளவையாளர் எச். சொக்மன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1964, மாச்சு 15 ஆந் திகதி கொண்ட வரைபடத்தில் குறிக்கப்பட்ட லோவர் டிவிஷன், கலபொட டிவிஷன் மற்றும் அப்பர் டிவிஷன் என்பவற்றை உள்ளடக்கிய கலபொட எஸ்டேட் என்றழைக்கப்படும் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணி தேயிலை மற்றும் பயிர்கள் தொழிற்சாலை கட்டிடம், பங்களா மற்றும் வேறு கட்டிடங்களும் அங்குள்ள யாவையும் உட்பட**

(விஸ்தீரணம் : 859ஏ. 1றூ. 34பே.)

**சொத்துக்குச் செல்லும் வழியும் பிரதான இலக்கங்களுக்கான தூரமும்.**- கொழும்பிலிருந்து கொழும்பு-இரத்தினபுரி-மட்டக்களப்பு 'A4' பெரும் வீதி வழியாக அவிசாவளை வரை சென்று அவிசாவளை-ஹட்டன் 'A7' பெரும் வீதி வழியாக கினிகத்ஹேன வரையும் சென்று அங்கிருந்து 12.3 கி. மீற்றருக்கு அப்பால் 59/12 ஆம் இலக்க கால்வாய் அருகே வலது பக்கமாக திரும்பி ரொசெல்ல வீதி வழியாக ரயில் கடவையைக் கடந்து 8 கி. மீ. வரை சென்றால் கலபொட எஸ்டேட்டை அடையலாம். குறிப்பிட்ட காணியில் இருந்து ஹட்டனுக்கு 18.5 கி. மீ. கினிஹத்ஹேனைக்கு 22 கி. மீ. கொழும்புக்கு 124.5 கி. மீ.

*(சொத்து வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷனில் (முன்பு பேன் ஏசியா வங்கி லிமிட்டெட்) அடகு வைக்கப் பட்டுள்ளது.)*

கடமைப்பட்டவரான கொழும்பு 2, வெக்ஷோல் வீதி, 55/75 ஆம் இலக்க இடத்தில் பிரதான வர்த்தக ஸ்தானத்தை (ஜனதா எஸ்டேற் டெவலப்மன்ட் போர்ட்) ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையால் சொத்து பேன் ஏசியா பேங்கிங் கோரப்பரேஷன் லிமிட்டெட்டில் அடகு வைக்கப்பட்டது. (முன்பு பேன் ஏசியா வங்கி லிமிட்டெட்)

கொழும்பு பகிரங்க நொத்தாரிசு டி. வி. எகொடகே என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2004, செத்தெம்பர் 2 ஆந் திகதியும் 272 ஆம் இலக்கமும் கொண்ட பிணையுறுதி மற்றும் கொழும்பு பகிரங்க நொத்தாரிசு என். ஜ. சமரசிங்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2001, நவெம்பர் 7 மற்றும் 1999, யூன் 24 ஆந் திகதியும் 1093 மற்றும் 737 ஆம் இலக்கங்கள் கொண்ட அடகு பிணைகளின் மேல் கடமைப் பட்டவர் கட்டணம் செலுத்தத் தவறியுள்ளார்.

வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷனால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் நாங்கள் 2006, யூலை மாதம் 6 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு மேற்படி சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வோம்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிகரமான கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய உள்ளூர் அதிகார வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணமான 2 1/2% (இரண்டரை வீரம் மட்டும்) ;

(4) ரூபா 45,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவுகளின் 50% ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500.

(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2005, ஏப்பிறல் 25 ஆந் திகதிய "சிலோன் டெயிலி நியூஸ்", "லக்பிம", "சுடர்ஒளி" புதினப் பத்திரிகைகளையும் 2005, மே 15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

மேலதிக விபரங்கள், உறுதி மற்றும் ஏனைய ஆவணங்களை "கொழும்பு 03, காலி வீதி, 450, பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன், உதவிப் பொது முகாமையாளர்-சட்டம்" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும். பார்வையிடவும் முடியும்.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
கீர்த்திவாய்ந்த முன்னணி பட்டய ஏலதாரர்கள்,
இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார்துறை வங்கிகளுக்கான மதிப்பீட்டாளர்கள், நீதிமன்ற ஆணையாளர்கள்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகம் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, | 55ஏ, தர்மபால மாவத்தை, |
| கண்டி | கொழும்பு 03 |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 2441761 |
| டெலி/ஃபக்ஸ் : 081-2224371 | டெலி/ஃபக்ஸ் : 2448526 |
| | ஈ-மெயில் : sameera@srilanka.net |

6-441

**மக்கள் வங்கி - தலைமை அலுவலக கிளை**

பெறுமதிமிக்க காணி (களனி பிரதேச சபை எல்லைகளுக்குள், சிங்ஹாரமுல்ல, லியோ வீதியில் அமைந்துள்ளதும் "பெலவத்தை" என அழைக்கப்படுவதுமான காணி) அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து ஏலவிற்பனை

(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 17.70பே.)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- களனி-பியகம வீதியில் 6 ஆம் மைல்கல் வரை சென்று களனி விஹாரை வீதி வழியே செல்லும் போதும் லியோ வீதியை எதிர்கொள்வீர். அவ்வீதியில் சிறு தூரம் செல்லும்போது இல. 537/6 ஐக் கொண்ட இவ்வாதனம் அமைந்துள்ளது.

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட் டுள்ள அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2004.12.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2005.01.11 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.-வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, மக்கள் வங்கி வலய அலுவலகம், உதவிப் பொது முகாமையாளர் (மேற்கு வலயம் 1)" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2327848, 2393678, 4-717008 ; தொலைநகல் : 4-717009.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப் பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்
விலைமதிப்பிடுநர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. : 2419126
தொலைநகல் : 074-719526

6-473